செ. வெ. எண்: 249 நாள் : 05.11.2014

**சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. சைதை துரைசாமி அவர்கள் மற்றும் முதன்மைச் செயலர்/ஆணையாளர், சென்னை மாநகராட்சி திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில், சென்னை மாநகராட்சி பொதுமக்களின் நலன்களை பாதுகாக்கும் வகையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையால் ஏற்படும் இடர்பாடுகளை களைய, குறிப்பாக பருவமழையினால் சாலையில் தேங்கும் மழைநீரை அகற்றவும், சாலையில் விழும் மரங்களை அகற்றவும், சாலையில் ஏற்படும் சேதத்தையும் மற்றும் தொற்றுநோய் பரவாமல் தடுக்கவும், சென்னை மாநகராட்சியில் உள்ள இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகள், ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு நிவாரணம், புனரமைப்பு மற்றும் மீட்பு பணிகளை உடனுக்குடன் மண்டல அளவில் மேற்கொள்வதை கண்காணிக்க சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களிலும் பருவமழைக்கால உடனடி நடவடிக்கை எடுப்பதற்கென்று அதிகாரிகள் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களாக பெய்து வரும் வடகிழக்குப் பருவமழையால், இன்று (05.11.2014) வரை சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாநகராட்சியின் பராமரிப்பில் உள்ள மழைநீரால் சேதமடைந்த 1013 சாலைகளில், 34112 ச.மீ. பரப்பளவில் உள்ள 4229 பள்ளங்கள் கண்டறியப்பட்டு, 33586 ச.மீ. பரப்பளவில் உள்ள 4131 பள்ளங்கள் தற்காலிமாக வெப்பக்கலவை (Hot Mix), மழைக்காலங்களில் பிரத்யேகமாக உபயோகிக்கப்படும் தார்கலவை (Cold Mix), கருங்கல் ஜல்லி மற்றும் மலைமண் கலந்த ஈரக்கலவை (Wet Mix) மற்றும் சிமெண்ட் கான்கிரீட் கலவை (Cement Concrete Mix) ஆகியவை கொண்டு செப்பனிடப்பட்டுள்ளன. மீதமுள்ள 526 ச.மீ. பரப்பளவில் உள்ள 98 பள்ளங்களை செப்பனிடும் பணி நடைபெற்று வருகிறது.

தற்போது பெய்து வரும் தொடர் வடகிழக்குப் பருவமழையால் சென்னை மாநகராட்சியில் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க, தொடர் நடவடிக்கையாக பல்வேறு பணிகள் பொதுசுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அனைத்து மண்டலங்களிலும் 04.11.2014 மற்றும் 05.11.2014 ஆகிய தினங்களில் குடிசைப் பகுதிகளில் 32 மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடைபெற்றன. இதில் 3,357 பேர்கள் பயனடைந்துள்ளனர். மொத்தம் இதுவரையில் 292 மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, 28,347 பேர்கள் பயனடைந்துள்ளனர். மருத்துவ முகாம்களில் நோய் அறிகுறிகள் கண்டறியப்பட்டவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மலேரியா பணியாளர்களைக் கொண்டு அரசு கட்டிடங்கள், அலுவலகங்கள், உணவு விடுதி, பூங்காக்கள், சினிமா தியேட்டர்கள், கல்யாண மண்டபங்கள், தொழிற்சாலைகள் மற்றும் மற்ற இடங்களில் சுத்தம் செய்து, தேவையற்ற பொருள்களை அப்புறப்படுத்தி தண்ணீர் தேங்காவண்ணம் செய்து, ஏடிஸ் மற்றும் மற்ற கொசுப்புழுக்கள் வளராமல் தடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார ஆய்வாளர்களைக் கொண்டு மாநகராட்சியில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மற்ற கல்வி நிறுவனங்களில் மாணவர்களுக்கு நலக்கல்வி அளிக்கப்பட்டு, பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்யப்பட்டு, தேவையற்ற பொருள்களை அகற்றி ஏடிஸ் கொசுப்புழுக்கள் வளராமல் தடுக்கப்பட்டுள்ளது.

பொதுசுகாதாரப் பணியாளர்களை கொண்டு புதியதாக கட்டப்பட்டு வரும் கட்டிடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, கொசுபுழுக்கள் உற்பத்தியாகும் இடங்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்படுகின்றன.

காலிமனைகளில் மழைநீர் தேங்கியுள்ள இடங்களில் MLO oil தெளிக்கப்பட்டு கொசுக்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

வளர்ந்த கொசுக்களைக் கட்டுப்படுத்த வீடுவீடாகவும், மழைநீர் வடிகால்களிலும் மற்றும் குடிசைப்பகுதிகளிலும் 435 கைகளால் எடுத்து செல்லும் புகைப்பரப்பிகளாலும், 42 வாகனத்தில் பொருத்தப்பட்ட புகைப்பரப்பிகளாலும் கொசுக்களை அழிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**வெளியீடு: மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை மாநகராட்சி**